Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb
Ir Ta
Ru Pt

#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

“கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## PROGN0STICATION 2010-2011

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 200% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : **25%**
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to APR. 10 : 397 Nos.
  - Up to MAR. 10 : 396 Nos.
- **Performance Apr‘10 …**
  - Turnover growth : 1.05 %
  - Employment growth : - 2.31%
  - 100% Attendance : 14.97%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. S. Vanajambika

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. T. Amala Dhas | : Plating. |
| Mr. T. Ramesh | : Production. |
| Mr. N. Murugan | : Projects. |
| Mr. A. Rathinam | : Design. |
| Mr. M. Suyambu | : Stores. |
| Mr. RM. Ravichandran | : Marketing. |
| Mr. S. Siva Kumar | : Marketing. |
| Mr. C. Babu | : Finance. |
| Mr. R. Ramesh | : QA. |
| Mr. C. Sounder Suresh | : Purchase. |
| Mr. K. Manivannan | : Production–FRP |
| Mr. G.Balachandran | : R&D. |
| Mr. Sridhar Ganapathy | : Administration |

## ACHIEVEMENT




## ஆசை

ஒரு ஊரில் அழகிய புல்வெளி இருந்தது. நட்புடன் பழகி வந்த இரண்டு ஆடுகள் தினந்தோறும் அந்த புல்வெளிக்குச் சென்று வயிறார புற்களை மேய்ந்து விட்டுத் திரும்பும். அன்றும், அப்படித்தான் இரண்டு ஆடுகளும் ரசித்து, ருசித்து மேய்ந்து கொண்டிருந்தன. அதில் ஒரு ஆடு, புல்வெளிப் பகுதியை விட்டு சுற்றுப்புறங்களைச் சுற்றிப் பார்க்கவே, சற்று தொலைவில் நன்கு அடர்ந்து வளர்ந்து காணப்பட்ட காய்கறித் தோட்டம் ஒன்று அதன் கண்களுக்குத் தென்பட்டது.

நண்பா! நாம் எப்பொழுதும் இந்த ஒரே வகைப் புல்வெளியிலே மேய்கிறோம். இது உனக்கு அலுப்புத் தட்டவில்லையா? அதோ சற்றுத் தொலைவில் அழகிய காய்கறிகள், செடிகள், பல வகை வண்ணங்களில் தெரிவதைப் பார்த்தாயா? ஒரு மாறுதலுக்காக, இன்று நாம் அங்குச் சென்று அவற்றை உண்போமா? வா, சென்று வரலாம் என்று அழைத்தது.

நண்பா! உன் எண்ணமே மிகத் தவறு. தவறான எண்ணங்களை ஆரம்பத்திலேயே வளர விடாமல் தவிர்க்க வேண்டும். நமக்குத் தான் போதிய அளவில் புற்கள் இந்தப் புல்வெளியில் உள்ளதே! மேலும், இந்தப் புற்கள் எந்த விதத்திலும் குறைந்த தரமுடையவை அல்ல! அப்படியிருக்க, உனக்கு ஏன் இந்த விபரீத ஆசை? என்றது. அந்தக் காய்கறித் தோட்டத்தின் உரிமையாளர், அதை வேலிப் போட்டு, பாத்திக் கட்டி, நேரந் தவறாமல் நீர்ப் பாய்ச்சி அதை வியாபார நோக்கத்திற்காகக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறார். அப்படியிருக்க, நாம் அதை உண்ண நினைப்பது பெரிய தவறு. இப்போதே உன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, நமக்கு கிடைத்ததை உண்போம் என்றது.

அதைக் கேட்காத நண்பன், ஆஹா! இப்படி ஒரு தோட்டம் இருப்பதை இவ்வளவு நாளும் பார்க்காமல் இருந்து விட்டோமே ! என்று தோட்டத்தின் வேலியைத் தாண்டி உள்ளே சென்று தன் விருப்பப்படி காய்கறிகளை கடித்து உண்ண ஆரம்பித்து விட்டது. அதன் வித்தியாசமான ருசியால் மேலும், மேலும் கடித்துத் தன் விருப்பம் போல் உண்டது. தோட்டத்தின் பின்புறம் ஆற்றிலிருந்து நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தத் தோட்டக்காரரை கவனிக்கவில்லை.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்த தோட்டக்காரர், அங்கு ஒரு ஆடு அனைத்தையும் கடித்துத் தின்று கொண்டிருப்பதைப் பார்த்து விட்டார். மிகுந்த கோபம் கொண்ட தோட்டக்காரர், அந்த ஆட்டைப் பிடித்து, பக்கத்தில் கிடந்த பெரிய கம்பைக் கொண்டு தன் ஆத்திரம் தீரும் மட்டும் நன்றாக அடித்தார். அடிபட்ட ஆடு அலறியது. வேதனை தாங்க முடியாமல் வலியால் துடித்தது.

தன் நண்பன் கூறியதைச் சிறிதும் கேளாமல் வந்ததற்கு நமக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. கிடைத்ததை உண்ண மறுத்து பேராசைக் கொண்டு பிறர் தோட்டத்திற்குள் திருட்டுத்தனமாக நுழைந்ததற்கு எனக்குச் சரியான தண்டனை கிடைத்து விட்டது. இனி எந்த சூழலிலும் “பிறர் பொருளுக்கு ஆசை படக்கூடாது”, என்று தனக்குத் தானே உறுதி எடுத்துக் கொண்டு, நடக்க முடியாமல் தள்ளாடியபடியே சென்றது.

தொகுத்தளித்தவர்
Ms. P.E. நான்சி
Director – Admin.

## FUNCTIONAL WISHES




**Happy Fathers'day**
**June,20**

**Best Wishes from Tiaano Employees.**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. Vincent |
| Central Excise | : Mr. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Jeya Clinic,<br>HansaGarden,<br>Rajakilpakkam |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!

அவர் நல்லவராவதும் தீயவராவதும்அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. A. Alex Linnus** – Facilitation | June, 01 |
| **Mr. D. Vinoth** - Production | June, 03 |
| **Mr. S. Samuvel** – Admin | June, 03 |
| **Master Adhavan Kumar** S/o Mr. Velappan Jeyakummar | June, 04 |
| **Mr. A. Rathinam** – Design | June, 04 |
| **Mr. M. Suyambu** – Stores | June, 05 |
| **Mr. K. Kanthan** – Stores | June, 05 |
| **Mr. V. Satish** – Production | June, 05 |
| **Ms. V. Rajakumari** - Coating | June, 07 |
| **Ms.M.Chandrakala** –W/o Mr.N.Murugan | June, 07 |
| **Mr. G. Vignesh** – Marketing | June, 08 |
| **Mr. Sri Ganesh** – Production | June, 08 |
| **Mr. M. Satish** – Aquafil | June, 08 |
| **Mr. A. Sekar** - Production | June, 09 |
| **Ms. Latha Kumari**-W/o Mr. T. Ramesh | June, 10 |
| **Mr. M. Venkatesan** B/o Mr. M. Nagarajan | June, 10 |
| **Mr. Raja Sibin** –B/o Mr. Raj Singh | June, 10 |
| **Mr. C. Babu** – Finance | June, 10 |
| **Mr. G. Muthu** – Production | June, 10 |
| **Selvi J.Jaya Priya** - D/o Ms. Kalaiselvi | June, 12 |
| **Ms. Aparna T V** –D/o Ms. Shaila Venkat | June, 12 |
| **Mr. J. Shanmugha sundaram** H/o Ms. Sasirekha | June, 13 |
| **Selvi J. Kavipriya** - D/o Ms. Kalaiselvi | June, 14 |
| **Ms. T.Jayalatha** - Accounts | June, 15 |
| **Baby T R Jansika** – D/o Mr. T. Ramesh | June, 15 |
| **Mr. A. Emmanuel Thamburaj** Production | June, 16 |
| **Mr. Benjamin Michael**- Production | June, 19 |
| **Mr. G. Jeevanantham** - Aquafil | June, 20 |
| **Mr. P. Sowrirajan** – F/o Mr. S. Arokiyaraj | June, 20 |
| **Mr. S. Arokiyaraj** - Production | June, 21 |
| **Mr. G. Balachandran** – R & D | June, 22 |
| **Mr. T. Rajakumaran** - Coating | June, 22 |
| **Ms. Gayathri T V** D/o Ms. Shaila Venkat | June, 23 |
| **Mr. P. Gopalakrishnan** - Production | June, 26 |
| **Mr. S. Pavithran** - Production | June, 26 |
| **Ms. J. Kalaiselvi** - Stores | June, 27 |
| **Ms. I Priya** –W/o Mr. GS Mohanakumar | June, 30 |

**Best Wishes by Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

ரத்தினங்களைக் கொண்டு அணிகலன்கள் உருவாக்கும் கலையை அறிய ஓர் இளைஞனுக்கு ஆசை வந்தது. அந்தக் கலையில் அனுபவம் வாய்ந்த முதியவரிடம் வேலைக்குச் சென்றான்.

முதல் நாள், ரத்தினங்களை உரசிப் பார்க்கிற கல் ஒன்றை இளைஞனின் கைகளில் தந்துவிட்டு, ரத்தினங்ளை சீர் செய்யும் பணியில் இறங்கி விட்டார் முதியவர். இளைஞன் அந்தக் கல்லைக் கைகளில் வைத்துக் கொண்டே அமர்ந்திருந்தான். ஒவ்வொரு நாளும் இது தொடர்ந்தது . இளைஞன் பொறுமையிழந்தான். “நான் எப்போது வேலை கற்பது?” என்று அலறினான். எந்த பதிலும் இல்லை.

பதினைந்து நாட்கள் கழித்து, அவன் கையில் அந்தக் கல் தரப்பட்டதும், “வழக்கமாகத் தருகிற கல் இது இல்லையே” என்றான் இளைஞன். “நீ கற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டாய்” என்றார் முதியவர்.

சாதாரண கற்களில் வித்தியாசம் உணரும் பொறுமை இருந்தால் தான் நவரத்தினங்களின் தரத்தை உணர முடியும்.

“பொறுமை தான் முதல் பாடம். திறமை தானாகவே வரும்”.

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## வெற்றியின் ரகசியம் [தொடர்ச்சி]

உழைப்பு

லட்சியத்தை நோக்கி கடுமையாக உழையுங்கள். உங்கள் பார்வை எப்போதும் லட்சியத்தை நோக்கியதாக மட்டுமே இருக்க வேண்டும். லட்சியத்தை பார்க்கும் கண்களுக்கு அதன் வழியில் இருக்கும் தடைகள் தெரியாது. அப்போது தான் உங்கள் உழைப்பு பலனை அளிக்கும்.

தெளிவுறுங்கள்

லட்சியம் குறித்து பல்வேறு விஷயங்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள். தவறுகள் மூலமாகவும் பலவற்றை கற்றுக் கொள்ளலாம். தவறுக்காக எப்போதும் கவலைப்படாதீர்கள். உங்கள் தவறுகள் தான் பல சமயங்களில் நல்ல முடிவுகளை எடுக்க உதவும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

குறுக்கீடு

உங்கள் லட்சியத்தைக் கெடுக்கும் வகையில் நபரோ, பொருளோ, அல்லது பணமோ குறுக்கே வருவதை அனுமதிக்காதீர்கள். உங்களது அனைத்து எண்ணங்களையும் லட்சியத்தை நோக்கியே செலுத்துங்கள். உங்கள் நேரத்தை அதற்காகவே செலவிடுங்கள்.

தனித்துவம்

உண்மையாக இருங்கள். உங்களை நம்புங்கள். சுயமாக சிந்தித்து சொந்த திறமையை வெளிப்படுத்துங்கள். மற்றவர்களை பின்பற்றிச் சென்றால் தனித்துவம் இருக்காது.

கலந்தாய்வு

எந்த மனிதனும் தனியல்ல. எங்கும் எப்போதும் ஒரு குழுவாகவே இருக்க வேண்டும். உங்களது எண்ணங்களை, சிந்தனைகளை மற்றவர்களுடன் கலந்து பேசுங்கள். அவர்களையும் பேசச் சொல்லுங்கள். மற்றவர்களையும் ஊக்கப்படுத்துங்கள். பயிற்சி, ஊக்கம் போன்றவற்றை ஒரு சேரப் பெறுங்கள்.

பொறுப்பேற்பு

எப்போதும் யாரையும் ஏமாற்றாதீர்கள். யாரிடமும் பொய் சொல்லாதீர்கள். உறுதி அளித்தால் அதை எப்பாடுபட்டாவது நிறைவேற்றுங்கள். தவறு செய்தால் அதை ஒப்புக் கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் செயலுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். நேர்மை, கீழ்பணிதல், பொறுப்புடன் செயலாற்றுதல் போன்றவை இல்லாமல் எந்த காரியத்தையும் சாதிக்க இயலாது. எனவே இவற்றை கடைபிடித்து உங்களது லட்சியத்தை நிறைவேற்றுங்கள். நாம் பிறந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல் வாழ்ந்ததற்கான சுவடுகளை ஏற்படுத்தி விட்டுச் செல்லுங்கள்.

நன்றிஹ ராம்மலர்

## Fathers' Day

### This poem is dedicated for "Fathers' Day"

Dad, I think about all the things in my life which you have given to me.

You taught me how to fix things that are broken and how to live responsibly.

You even taught me how to be a mechanic by checking the motor oil in the car.

You taught me that money doesn't grow on trees and how to save coins in a jar.

You taught me how to draw animals from numbers and you let me to be creative.

You taught me to respect my elders and told folklores of many natives.

You taught me to be honest always and to help others who are in need.

You taught me how to view life and how crooked people can be.

You taught me that every day I should learn something new.

You taught me that if I needed anything I could always count on you...

You taught me to think positive and to always look ahead.

You taught me how to use all those handy tools in your shed.

You taught me how to live life to its fullest and always to smile.

You taught me how to appreciate even the little things in Life.

You taught me to be "**ME** "and encouraged me to spread my wings.

Dad, you have taught me so many wonderful things

And you have inspired me in so many ways.... to live, love and laugh everyday. You are everything that I am today and I just wanted to say...

**Thanks for loving me and Happy Fathers' Day!!!!**

தொகுத்தளித்தவர்

Mr. C.Abilash - Titanictrade

## அன்புள்ள அப்பா

அம்மா
எத்தனையோ முறை
திட்டினாலும்
உறைத்ததில்லை
உறைத்திருக்கிறது
என்றேனும்
அப்பா
முகம் வாடும் போது.





எப்படி எப்படி
எல்லாமோ
தன் பாசம்
உணர்த்துவாள் அம்மா
ஒரேயொரு
கைஅழுத்தத்தில்
எல்லாமே
உணர்த்துவார்
அப்பா

முன்னால்
சொன்னதில்லை
பிறர் சொல்லித்தான்
கேட்டிருக்கிறேன்
என்னைப்
பற்றி பெருமையாக
அப்பா
பேசிக்கொண்டிருந்ததை!





சிறுவயதில்
என் கைபிடித்து
நடைபயில
சொல்லிக் கொடுத்த
அப்பா
என் கரம் பிடித்து
நடந்த போது
என்ன நினைத்திருப்பார்?

உன் அப்பா
எவ்வளவு உற்சாகமாக
இருக்கிறார் தெரியுமா
என என் நண்பர்கள்
என்னிடமே சொல்லும்
போது தான் எனக்குத்
தெரிந்தது
எத்தனை பேருக்குக்
கிடைக்காத தந்தை
எனக்கு மட்டும் என..





கேட்ட உடனே
கொடுப்பதற்கு
முடியாததால் தான்
அப்பாவை அனுப்பி
இருக்கிறாரோ கடவுள்!

எத்தனையோ பேர்
நான் இருக்கிறேன்
எனச் சொன்னாலும்
அப்பாவை போல
யார் இருக்க முடியும்?





லேசாக என் கால்
தடுமாறினாலும்
பதறும் அப்பா
இன்று நான்
தடுமாறிய போது
பதறாமல் இருக்கிறார்
வெற்றி இலக்கை
நான் எட்டிப்பிடித்ததால்.

சொல்லிக்
கொடுத்ததில்லை
திட்டியதும் இல்லை
இல்லை என்றும்
சொன்னதுமில்லை
வேண்டாம் எனக்
கூறியதும் இல்லை
இருந்தும் ஏதோ
ஒன்றினால்
கட்டுப்படுத்தியது
அப்பாவின் அன்பு.





அம்மா செல்லமா
அப்பா செல்லமா
என கேட்டபோதெல்லாம்
பெருமையாகச் சொல்லி
இருக்கிறேன்
அம்மா செல்லமான
அப்பா செல்லம் என.
இன்றோ
அவர்கள் தம்
பேரக் குழந்தைகளின்
செல்லமாகிவிட்டனர்.

தொகுத்தளித்தவர்
M.S.Manian

## கவிதைகள்

விடியல் உன் கையில்

இரவின் மடியில் சாய்ந்து கொண்டு
விடியலுக்காக காத்திருப்பதை விட
இரவின் கைபிடித்து நடைபயணம் செய்துபார்
விடியல் உனக்காக வரவேற்பு கம்பளம்
விரித்து காத்திருக்கும்.
உழைப்பென்னும் உளிகொண்டு
செதுக்கிப்பார் – உன் மனதை
உயிருள்ள சிற்பமாய் காட்சியளிப்பாள்
உன் வெற்றி தேவதை.
வாய்ப்புகள் வாயிற்கதவை தட்டும் என
காலச் சக்கரத்தை வேடிக்கை பார்ப்பதை விட
காலச்சக்கரத்துடன் நீயும் சுழன்று பார்
வாய்ப்புகள் உன் வாசலில் வரிசையில்
நின்று வாய்ப்பு கேட்கும்.
நீயும் கடிவாளம் கட்டிய குதிரையாய் – ஒடிப்பார்
உன் இலட்சிய பாதையில்
உன் இலக்கு உன் கையில் ஜொலிக்கும்
நிலக்கரி பிரித்த வைரமாய்.

தொகுத்தளித்தவர்
Mr.R.ஆனந்த்- Marketing

## வலிகள் இல்லாமல் வாழலாம்

உழைப்பை
உயிராய் நினைப்பவர்கள்
ஒரு போதும்
ஓய்வை நினைப்பதில்லை!!
உழைப்பு
ஒரு செயல் அல்லé .
சேவை!!
சேவையாய்
செய்யப்படுகிற எதுவும்
சிரமங்களை
பெரிதுபடுத்துவதில்லை!!
சுற்றும் பூமி
சோம்பல் கொள்ளாமல்
சுற்றுவதால் தான்
இரவு பகல்
எல்லாருக்கும் கிடைக்கிறது!!
எதிர்பார்ப்பை
தள்ளி வைத்து விட்டு
செய்வதை
வேலையாய் எண்ணாமல்
சேவையாய் எண்ணினால்
வலிகள் இல்லாமல்
வாழ்ந்து போகலாம்!!

தொகுத்தளித்தவர்ஹ
Mr. Alex Linnus - Facilitation

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின்
குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள்,
கட்டுரைகள், கதைகள்
வரவேற்கப்படுகிறது.
– **Editor**

## ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு

இந்த ஆண்டு (2010 – 2011) நமது நிறுவனத்தில் நடைபெற உள்ள 8ம் ஆண்டு அலுவலர் தின விழாவினை ஒட்டி ஒரு புதிய முயற்சியை நமது நிர்வாகம் மேற்கொள்ள இருக்கிறது. அதாவது, நமது அலுவலர் தம் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் யாதேனும் ஒரு துறையில் தனித் திறன் பெற்றிருந்தால், அதனை வெளிக்கொணரும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்திருக்கும்.




உதாரணமாக, நமது சக அலுவலர் திரு. முனுசாமி (FIBTEC), அவர்களின் புதல்வர் திரு. செந்தமிழ்ச்செல்வன், சென்ற வருடம் கண் பரிசோதனை முகாம் நடத்தினார். அது போல, கைவினைப்பொருட்கள் தயாரித்தல் போன்ற தனித்திறன் உள்ள நமது குடும்ப உறுப்பினர்கள், தங்களின் அனுபவங்களை, தயாரிக்கும் முறைகளை, பகிர்ந்து கொள்ளவும், தயாரித்த பொருட்களை விற்பனை செய்யவும், வழி வகை செய்ய சிறிய அளவிலான ஸ்டால்களை நிர்வாகம் இலவசமாக அமைத்துத் தர இருக்கிறது.

திறமையும், விருப்பமும் உள்ளவர்கள், தங்களின் முழு விவரங்களுடன் திருமதி. ஷைலாவெங்கட் (கஸ்டமர் கேர்) அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். [கைபேசிஹ 0 – 9884100421]

நிர்வாகம்.

## Goal Achievement Celebration

